# யுவதிகள் வேலைத்திட்டம் யும்பீனா

## பெற்றோருக்கான தகவல்

### யும்பீனாவிற்கு யார் வருகின்றனர்?

- 13ற்கும் 17வயதிற்கும் இடைப்பட்ட பெண்பிள்ளைகள்
- பாடசாலைமுடிந்து தொழில்கல்வி கற்கதொடங்கி யுவதிகளாகும் இடைக்காலத்தில்

### எதற்காக யுவதிகள் யும்பீனாவிற்கு செல்கின்றனர்?

- ஏனெனில் பாடசாலையிலும் பொழுதுபோக்கு நேரத்திலும் பிரச்சனைகள் தோன்றுவதால்
- ஏனெனில் தமது வயதொத்தவர்களுடனும் பெரியவர்களுடனும் சச்சரவுகள் ஏற்படுவதால்
- ஏனெனில் தொழில்கல்விகூடம் அல்லது வேலைத்தளம் கிடைப்பதில் கஸ்டங்கள் இருப்பதால்
- ஏனெனில் வயதிற்கு வரும்காலத்தில் கோளாறுகள் தோன்றுவதனால்

இத்தகைய வாழ்க்கை பருவத்தில் இளையோர் யுவதிகளுக்கு நல்ல வழிகாட்டலும் ஒத்துழைப்பும் தேவைப்படுகின்றது.

### கீழ்க்காணும் இலக்குகளை அடைய யும்பீனா முனைகின்றது

- முன்கூட்டியே பாடசாலையிலிருந்து விடுபடுவதை தவிர்த்தல். அதாவது தொடர்ந்தும் பள்ளி சென்று சரியான முறையில் பாடசாலை காலத்தை நிறைவு செய்தல்
- கல்வி மற்றும் தொழில் உலகத்திற்குள் இவர்களை இணைத்தல். அதாவது ஒரு தொழில்கல்வி அல்லது வேலையை தெரிதலும் அதில் நிலைத்தலும்.

### யும்பீனாவால் கீழ்வருவனவற்றை வழங்க முடியும்

- சேர்ந்து தீர்வுகளை கண்டறிதல்
- சச்சரவுகளின் போது அறிவுரையும் தரவுகளும் அளித்தல்
- கஸ்டமான சூழ்நிலைகளின் போது வழிநடத்தல்
- பாடசாலைக்கல்வியில் பிரச்சனை ஏற்படும் போது வழிநடத்தல்
- தொழில்தேர்வின் போதும் தொழில்கல்வி மற்றும் வேலைத்தளங்களை தேடும் முயற்சிகளுக்கும் உதவியளித்தல்
- இடைக்கால தீர்வுகளுக்கான ஒத்துழைப்பு. உதாரணமாக 10ம் வகுப்புவரை படித்தல் அல்லது தொழில்கல்விக்கான ஆயத்தப்படுத்தல் போன்றவை.

இச்சேவை கிழமைக்கு 1 தொடக்கம் 6 மணித்தியாலங்கள் வரையிலும் குறைந்தது 3 மாதங்களிற்கு என ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### யும்பீனா பின்வருவனவற்றை முக்கியமானதாக கருதுகின்றது.

- யுவதிகளுடனான செயல்பாட்டிற்கான அடிப்படையாக நம்பிக்கையை வளர்க்க கூடியவாறு தொடர்புகளை பேணுதல்.
- பிரச்சனைகளை மட்டும் நோக்காமல் யுவதிகளின் திறமைகளை அடிப்படையாக வைத்து செயல்படுதல்.
- பலதரப்பட்ட தொடர்பாளர்களுடனும் நெருக்கமாக இணைந்து செயல்படுதல் (பெற்றோர், பாடசாலை, இலாகாக்கள் போன்றவை)
- கலந்துரையாடல்களையும் தகவல்களையும் நம்பிக்கையுடன் பேணுதல்

### விண்ணப்பம்:

- யுவதிகள் அல்லது பெற்றோர் நேரடியாக எங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.
- யுவதிகள் பாடசாலையூடாக (ஆசிரியர், பாடசாலை மேற்பார்வைகுழு) அல்லது வேறு அலுவலகங்கள் மற்றும் இலாகாக்களினூடாக எங்களிடம் பதியப்படலாம்.
- யும்பீனாவை எந்தவித கடப்பாடுகளுமின்றி பார்வையிட்டு செல்லலாம்.

யும்பீனாவில் இரு சமூகசேவைகள் பணியாளர்களும் ஒரு சமூகசேவை பயிலுனரும் வேலை செய்கின்றனர்.
யும்பீனா என்பது வின்ரதூர் நகரசபையினால் முன்னெடுக்கப்படும் நகரத்தில் வாழும் யுவதிகளிற்கான ஒரு சேவையாகும்.

### விலாசமும் வரைபடமும்:

Mädchenprogramm Jumpina
Trollstrasse 18
Postfach
8402 Winterthur
தொலைபேசி: 052 267 65 88
மின்னஞ்சல்: jumpina@win.ch
இணையத்தளம்: www.jumpina.winterthur.ch

Tamilisch

## Adresse und Lageplan

**Jumpina**
Beratungsangebot für Mädchen
Trollstrasse 18
8400 Winterthur

Telefon 052 267 65 88

Mail: jumpina@win.ch

Homepage: www.jumpina.winterthur.ch

Öffnungszeiten:
Montag – Freitag 9.00 – 12.00 Uhr
13.30 – 17.00 Uhr

